**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.163/2018**

**Deposition of Witness for : P.W.18**

**Name :** திரு சடகோபன்

**Father's Name :**

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

எதிரிகள் 1 முதல் 6 ஆஜர். 7 முதல் 10 எதிரிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18.08.2023.**

முதல் விசாரணை -

நான் ஓய்வு பெற்ற சிறப்பு உதவி ஆய்வாளர். நான் 21.1.2017 அன்று தூசி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, தூசி காவல் ஆய்வாளர் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு ஒப்படைக்கவேண்டி என்னிடம் ஒப்படைத்த பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய பணி மருத்துவரிடம் ஒப்படைத்து பிரேத பரிசோதனை முடிந்த பிறகு

பிரேதத்தை பிரேதத்தின் உறவினர்களிடம் ஒப்படைத்தேன். காவல்நிலைய குற்ற எண். ஞாபகம் இல்லை. 2.3.2017 அன்று பிரேதத்தின் உடல் உள்ளுறுப்பு மாதிரிகளை வேலூர் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து காவல் ஆய்வாளரிடம் அறிக்கை செய்துக்கொண்டேன்.

பிரேதத்தின் மீது இருந்த உடைகளை வாங்கினேனா என்றால் வாங்கினேன். என்னென்ன உடைகள் என்றால் தற்போது ஞாபகம் இல்லை. சாட்சியிடம் தனி அறிக்கையை காட்ட சாட்சி தனி அறிக்கையை பரிசீலனை செய்தபிறகு காக்கி நிற பேன்ட், வெள்ளை நிற அரைக்கை சட்டை, வெள்ளை நிற கட் பனியன், நீல நிற ஜட்டி, கருநீல நிற ஜெர்கின் ஆகியவற்றை பெற்றேன். மேற்கண்ட ஆடைகளை தனி அறிக்கையின் மூலம் காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். <u>தனி அறிக்கை அ.சா.ஆ.27</u>.

மேற்கண்ட ஆடைகளை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியுமா என்றால் பார்த்து ஞாபகம் இருந்தால் சொல்கிறேன் என்று சாட்சி சாட்சியம் அளித்தார். நீதிமன்றத்தில் உள்ளவைகள் தான் அவை. காக்கி நிற பேன்ட் <u>சான்று பொருள் 8</u>, வெள்ளை நிற அரைக்கை சட்டை <u>சான்று பொருள் 9</u>, வெள்ளை நிற கட் பனியன் <u>சான்று பொருள் 10</u>, நீல நிற ஜட்டி <u>சான்று பொருள் 11</u> , கருநீல நிற ஜெர்கின் <u>சான்று பொருள் 12</u>.

<u>1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

தனி அறிக்கையில் எந்த தேதியில் நான் காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரி தான். 2.2.2017 அன்று என்னுடைய தனி அறிக்ளகை நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது என்றால் சரி தான்.

**7 முதல் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென்று எடுத்துரைக்கப்பட்டது.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.